**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.234/2008**

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 15.04.2026 | | |
| பெயர்: | தமிழ்முல்லை<br>(PW1– Cross ) | கணவர் பெயர்: | சக்திமோகன் |
| கிராமம்: | கீழஆத்துக்குடி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | வீட்டுக்குடித்தனம் | வயது : | 75/2026 |

**<u>2 முதல் 5ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :15.04.2026</u>**

**(ஆரம்பித்த நேரம்– 13.01)**

1. 1ம் பிரதிவாதி காலம்சென்ற எனது மகள் புருஸ்கையாவின் கணவர் என்றால் சரிதான். எனது மகள் புருஸ்கையாவின் மரணத்திற்கு 1ம் பிரதிவாதி தான் காரணம் என்று சீர்காழி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் குற்ற எண்.310/2007 ல் பதிவு செய்யப்பட்டு, தற்போது வரை நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நான் இன்னும் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். எனது மகள் புருஸ்கையாவின் இறப்பு பயனீடுகளையும், கருணை அடிப்படையிலான பணியையும் 1ம் பிரதிவாதிக்கு கொடுக்க கூடாது என கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2. எனது மகள் புருஸ்கையாவிற்கு எனது கணவர் சக்திமோகன் கிராம நிர்வாக அலுவலராக இருந்து காலமான படியால் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி கிடைத்தது என்றால் சரிதான். மேற்படி குற்ற எண்.310/2007 வழக்கில் 1ம் பிரதிவாதி குற்றவாளி என தீர்மானிக்கப்பட்டால் தான் நான் கேட்கக்கூடிய பரிகாரம் குறித்து பரிசீலணை செய்ய முடியும் என்றால்

சரிதான். 1ம் பிரதிவாதி இரண்டாம் திருமணம் செய்துகொண்டுவிட்டார் என்றால் சரிதான். அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். எனது மகள் புருஸ்கையாவிற்கு வாரிசு சான்றிதழ் கோரி சீர்காழி வட்டாட்சியரிடம் மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை.

3. புருஸ்கையாவின் வாரிசுகளை ஆராய்ந்தபிறகு தான் அவருடைய பண பலன்கள் மற்றும் பணி பலன்களை 2 முதல் 4 பிரதிவாதிகள் கொடுப்பார்கள் என்பதால் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் இறந்துபோன புருஸ்கையாவின் வாரிசுகள் யார் யாரென்று கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் வட்டாட்சியர் நேரடியாக வாக்குமூலம் வாங்கிய பிறகு ஒருங்கிணைந்த சான்றின் அடிப்படையில் தான் எந்த பலனும் கொடுக்கப்படும் என்பதால் இந்த வழக்கை பொறுத்தவரை 2 முதல் 4 பிரதிவாதிகள் தேவையற்ற தரப்பினர்கள் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 13.15)**